**திருநெல்வேலி மாவட்டத்திற்கான வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கை**
**(செப்டம்பர் 7-ம் தேதி முதல் செப்டம்பர் 11-ம் தேதி வரை)**
**(வெளியீடு: வேளாண் வானிலை ஆலோசனை மையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவில்பட்டி மற்றும் இந்திய வானிலை துறை)**

**முந்தைய வார வானிலை (2.9.16- 5.9.16)**

| | |
|---|---|
| மழை (மி.மீ.) | 0.4 |
| அதிக பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 36- 37 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 26- 27 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 2- 4 |
| ஒப்புஈரப்பதம்(சதவீதம்) (07:00 LM T) | 56- 58 |
| ஒப்புஈரப்பதம்(சதவீதம்) (14:00 LM T) | 44- 45 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) | 2- 4 |
| காற்றின் திசை (டிகிரி) | 320 |

11.9.16 அன்று 08:30 மணியுடன் முடிவடையும் காலத்திற்கான வானிலை முன்னறிவிப்பு

| வானிலை காரணிகள் | வானிலை முன்னறிவிப்பு | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் - 1<br>7.9.16 | நாள் - 2<br>8.9.16 | நாள் - 3<br>9.9.16 | நாள் - 4<br>10.9.16 | நாள் - 5<br>11.9.16 |
| மழை (மி.மீ.) | 0 | 0 | 4 | 3 | 4 |
| அதிகபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 38 | 38 | 38 | 38 | 38 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 28 | 28 | 28 | 28 | 28 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 4 | 4 | 4 | 4 | 4 |
| ஒப்புஈரப்பதம் (சதவீதம்) | 44- 56 | 44- 56 | 44- 56 | 44- 56 | 44- 56 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) மற்றும் திசை | 4/ வடமேற்கு | 4/ வடமேற்கு | 4/ வடமேற்கு | 4/ வடமேற்கு | 4/ வடமேற்கு |

வரும் தினங்களில் அதிகபட்ச வெப்பநிலை, மிதமான மேகமூட்டம், இலேசான மழை மற்றும் ஈரப்பதம் கொண்ட வானிலைக்கேற்ற வேளாண் வானிலை ஆலோசனைகள்

| பயிர்/ சாகுபடி சூழல் | பருவம்/ சாகுபடி செயல்கள் | வேளாண் வானிலை ஆலோசனைகள் |
|---|---|---|
| வடகிழக்கு பருவமழை பருவ சாகுபடி | நிலம் தயாரித்தல் | வடகிழக்கு பருவமழை பருவத்தில் மானாவாரியில் பயிர் சாகுபடி செய்வதற்கு ஏதுவாக மானவாரி நிலங்களை உழவு செய்து தயார் செய்யவும். மானாவாரியில் மண் மற்றும் ஈரத்தை பாதுகாக்கும் முறையாக நிலத்தை சட்டிக்கலப்பையை பயன்படுத்தி ஆழமாக உழவு செய்யவும். கடைசி உழவிற்கு முன்பு தொழு உரம் அல்லது கம்போஸ்ட் 12.5 டன்/ எக்டர் என்ற அளவில் இடவும். ரோட்டோவேட்டர் கருவியை பயன்படுத்தி நிலத்தை நன்கு பண்படுத்தவும். |
| | | மானாவாரியில் சரியான சமயத்தில் விதைக்க ஏதுவாக விதைகள், விதைநேர்த்தி செய்ய பயன்படுத்தப்படும் மருந்துகள், இயற்கை உரங்கள் மற்றும் செயற்கை உரங்கள் போன்ற இடுபொருட்களை வாங்கி தயார்நிலையில் வைத்திருக்கவும். |
| முருங்கை | காய் ஈ கட்டுப்பாடு | வரும் தினங்களில் மிதமான மேகமூட்டம் மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலையில் முருங்கையில் காய் ஈ தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. காய் ஈக்களின் குஞ்சுகள் காயைத் தின்று சேதப்படுத்தும். இதனைக் கட்டுப்படுத்த பாதிக்கப்பட்ட காய்களை சேகரித்து அழித்துவிட வேண்டும். பென்தியான், டைக்குளோர்வாஸ், மானோகுரோட்டோபாஸ் ஆகியவற்றில் ஏதேனும் ஒரு மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு இரண்டு மிலி என்ற விகிதத்தில் கலந்து தெளிக்க வேண்டும். மருந்து தெளிப்பதற்கு முன் |

| | | |
|---|---|---|
| | | காய்களைப் பறித்துவிட வேண்டும். மருந்து தெளித்தபின் 10 நாட்களுக்கு அறுவடை செய்யக்கூடாது. |
| நெல் | பூக்கதிர் உருவாகும் பருவம் | வரும் தினங்களில் மிதமான மேகமூட்டம், மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலை எதிர்பார்க்கப்படுகிறது. இத்தகைய வானிலையில் நெற்பயிரில் கதிர் நாவாய்ப் பூச்சியின் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அத்தகைய அறிகுறிகள் தென்பட்டால் காலை அல்லது மாலை வேளையில் மாலத்தியான் 500 மில்லி/ ஏக்கர் என்ற அளவில் வயலின் சுற்றுப்புறத்திலிருந்து உள்நோக்கி அடித்துச் செல்லவும். |

குறுஞ்செய்தி- மழை: 9- 11.9.16: 4, 3& 4 மி.மீ. மானாவாரியில் சரியான சமயத்தில் விதைக்க ஏதுவாக (விதைகள், விதைநேர்த்திமருந்துகள், உரங்கள்) இடுபொருட்களை வாங்கி தயார்நிலையில் வைக்கவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்**
**கோவில்பட்டி**